| | | |
|---|---|---|
| அ.வ.எண். | : | **16/2012** |
| தேதி | : | **17.03.2026** |
| பெயர் | : | **ருத்ரதாண்டேஸ்வரர் த/பெ. ஆளாலசுந்தரம்** |

**வா.த.சா.1 (PW1) மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.**
**(**சாட்சியின் அடையாளம் ஆதார் அடையாள அட்டையின் மூலம் உறுதி செய்யப்பட்டது**. )**

**<u>வா.த.சா.1. (PW1) - குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

1) வாதசாஆ 2 எனது பெயரில் கிரயம் வாங்கிய ஆவணம் என்றால் சரிதான். வாதசாஆ 2 ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவண எண் 2415/1967 மற்றும் ஆவண எண் 2326/1972 பற்றிய விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ராமமூர்த்தி வகைரா வாங்கிய பாகப்பிரிவினை பத்திரத்தின் அடிப்படையில் சொத்தினை நான் அளந்து வாங்கினேன். மேற்சொன்ன பாகப்பிரிவினை பத்திரத்தின் அடிப்படையில் ராமமூர்த்தி வகைராவிடம் இருந்து நான் வாங்கிய சொத்தின் அளவானது 920 சதுர அடி என்றால் இல்லை. மேற்சொன்ன 920 சதுர அடி மட்டும் அல்லாமல் புழக்கடை மனையும் உள்ளது.

2) 920 சதுர அடியுடன் சேர்ந்தது தான் புழக்கடை மனை என்றால் சரியல்ல. வாதசாஆ 2 சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விவரங்கள் சரிதான். மேற்படி சொத்து விவரத்தில் 920 சதுர அடி என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் 940 சதுர அடி என்று உள்ளது. எனது விற்பனையாளரான ராமமூர்த்திக்கு 940 சதுர அடி தான் உரிமை உள்ளது என்றாலும் அவர் தனக்கு உரிமை இல்லாமல் 2230 சதுர அடி நிலத்தை எனக்கு விற்பனை செய்துள்ளார் என்றால் சரியல்ல.

3) 1ம் வாதியின் இடத்தையும் சேர்த்து பத்திரம் செய்துகொண்டேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி அனுபவம் செய்து வந்த புறம்போக்கு இடத்தையும் சேர்த்து 1710 சதுர அடி என்று கிரயம் செய்துகொண்டேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தற்போது உபயோகித்து வரும் பொதுப்பாதையை நான் அதை கிரயம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு பொதுவாக சொந்தமான திண்ணையும் சேர்த்து நான் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல நான் வாங்கவில்லை.

4) நான் 1ம் பிரதிவாதியை தொந்தரவு செய்தேன் என்றாலும், அவரை பயமுறுத்தி தாவா சொத்தினை கிரயம் பெற முயல்கிறேன் என்றாலும், இவ்வழக்கு 1ம் பிரதிவாதியை மனஉளைச்சலுக்கு உண்டாக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதுரையில் சொல்லப்பட்டுள்ள பட்டியல் சொத்து C, D, E ல் உள்ள சொத்துக்களில் எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**சாட்சி கையொப்பம் Sd/. ருத்ரதாண்டேஸ்வரர்.**

Typewritten by the Typist Open Court to my dictation and to my hearing read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/. P. Jagadeeswaran.
District Munsif,
Sriperumbudur.